**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
**IN THE COURT OF THE SESSIONS JUDGE,**
**MAHALIR NEETHIMANDRAM, MADURAI.**

| | |
|---|---|
| Sessions Case | - **S.C No. 76/2021** |
| Deposition of witness for | - P.W. 13 |
| Name | - Dr.Sathasivam |
| Father's Name/ Husband's Name | - |
| Village | - |
| Taluk | - |
| Caste | - |
| Calling | - |
| Religion | - |
| Age | - |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of **09.08.2023**

**1 முதல் 3எதிரிகள் ஆஜர்**

**முதல் விசாரணை:**

நான் தற்போது மதுரை மருத்துவ கல்லூரி சட்டம் சார்ந்த மருத்துவத்துறையில் இணை பேராசிரியராக பணிபுரிந்து வரகிறேன். நான் கடந்த 29.01.2020அன்ற அதே துறையில் உதவி பேராசிரியராக பணியில்இருந்தபோது எழுமலை வட்டம் காவல் ஆய்வாளரின் பிரேதப்பரிசொதனைக்கான வேண்டுகொள் கடிதத்தினை பெற்ற அங்கம்மாள் என்ற 65 வயதுடைய பெண்ணின் பிரேதத்தினை எம்.கல்லப்பட்டி காவல் நிலைய மு.நி.காவலர் சோனமுத்து என்பவர் அடையாளம் காட்ட அன்று பிற்பகல் 12.30 மணியளவில் பிரேதப்பரிசோதனையை தொடங்கினேன். பிரேதம் முழவதும் விறைத்த நிலையில் காணப்பட்டது. கை மற்றும் கால் விரல் நகங்கள் ஊதாநிறத்தில் காணப்பட்டன. **பிரேதத்தின் இறப்புக்கு முன் ஏற்பட்ட பின்வரும் காயங்கள் காணப்பட்டன:**

தலையின் பின் பகுதியில் 4செ.மீக்கு 3 செ.மீ அளவில் கன்றிய காயம் காணப்பட்டது. கபாலக்கூறாய்வு செய்தபோது கபாலத்தோலில் உட்புறத்தில் வலது பின் பகுதியில் 6செ.மீ x 4செ.மீ அளவில் கன்றிய காயம் காணப்பட்டது. மூளையின் இடது பக்கவாட்டு மற்றும் பின் பகுதியில் பரவலான இரத்தப்போக்கு காணப்பட்டது. வலது மூளையின் உட்பகுதியில் இரத்தக்கட்டு காணப்பட்டது. மார்பறை காலியாக இருந்தது. இதயம் அளவில் பெரியதாகவும் வெளிப்புறத்தில் கொழுப்பு படிந்தும் காணப்பட்டது. மார்பு மற்றும் வயிற்றின் உட்புற திட உறுப்புகள் வெட்டுத்தோற்றத்தில் இரத்தச்செறிவுடன் காணப்பட்டன. மூச்சுக்குழல் சீராக இருந்தது. வயிற்றில் 200 மிலி அளவில் அரக்கு நிறதிரவம் குறிப்பிடத்தகுந்த நெடி எதுவும் இல்லாமல் இருந்தது.

**கருத்து:**

இறந்தவர் அவரது இறப்பிற்கு முன் ஏற்பட்ட தலைக்காயத்தினால் இறந்திருக்கலாம் என்று சான்று வழங்கினேன். **நான் வழங்கிய பிரேத பரிசோதனை சான்று அதசாஆ.3.**

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

பிரேதப்பரிசோதனைக்கு முன்னர் காவல் துறையிடம் இருந்து வேண்டுகோள் கடிதம் கொடுக்கப்படும் என்றால் சரிதான். அந்த வேண்டுகோள் கடிதத்துடன் வழக்கின் சரித்திரமும் இணைத்து கொடுக்கப்படும் என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பந்தமாக ஆயுதம் எதுவும் என்னிடம் காண்பிக்கப்பட்டதா என்றால் காண்பிக்கப்பட்டது. என்னிடம் காண்பித்த ஆயுதத்தை நான் பராமரித்த கோப்பில் வரைய வேண்டுமா என்றால் தேவையில்லை. எங்களின் விதிகளுக்கு உட்பட்டு நாங்கள் பராமரிக்கும் ஆவணத்தில் ஆயுதத்தை வரைந்திருக்க வேண்டும் என்றால் சரியல்ல. என்னிடம் எந்த ஆயுதத்தையும் காட்டவில்லை அதனால் தான் நான்

கோப்புகளில் வரையவில்லை என்றால் சரியல்ல. இறந்து போன நபருக்கு அளிக்கப்பட்ட சிகிச்சை பற்றிய குறிப்புகள் பிரேத பிணக்கூறாய்விற்கு முன்பு அனுப்பப்பட்டுள்ளது. அதில் விபத்து பதிவேடு நகல் அனுப்பப்படவில்லை. விபத்துப்பதிவேடில் ஆயுதம் மாறுபட்டுள்ள காரணத்தினால் தான் அதை மறைக்கவேண்டும் என்ற நோக்கத்தோடு என் பார்வைக்கு சமர்ப்பிக்கவில்லை என்றால் அது பற்றி தெரியாது. பொதுவாக கன்றிய காயம் சொரசொரப்பான பகுதியில் கீழே விழும்போதும் ஏற்பட வாய்ப்புண்டு. இதயம் வீங்கி இருந்ததற்கான காரணம் நோயினால் இருக்கக்கூடுமா என்றால் வயது மூப்பினால் ஏற்பட வாய்ப்புண்டு இறந்தவரின் வயது இறப்பின்போது 65 என்றால் சரிதான். இதயத்தை சுற்றி கொழுப்பு படிந்து காணப்படுவது ஒரு நோயினால் தான் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு ”சரி” என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம், மதுரை.